**ஐக்கிய அமெரிக்க தூதரகம்**
**கொழும்பு**
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொ.பே: +94 (11) 249-8100 ● பெக்ஸ்: +94 (11) 244-9070
ஈமெயில்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20200727

**தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண ஏற்றுமதிகளை அதிகரிக்க இலங்கை ஆடைத் தொழிற்துறையுடன் அமெரிக்கா பணியாற்றுகிறது.**

**கொழும்பு, ஜூலை 27** – தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (Personal Protective Equipment) அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுக்கு அமெரிக்கா உதவுகிறது. இணைந்த ஆடைத் தொழிற்துறை சங்க சம்மேளனம் (Joint Apparel Association Forum ) மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை (Export Development Board ) என்பனவற்றுடன் இணைந்து, இந்தத் திட்டமானது 100இற்கும் மேற்பட்ட தொழில்துறை பங்கேற்பாளர்களுக்கு அமெரிக்க சந்தையில் நுழைவதற்கு அவர்களை தயார்படுத்திக் கொள்வதற்காக இரண்டு இணைய செயலமர்வுகளை ஏற்பாடு செய்தது. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) இந்த திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதுடன், டெலாய்ட் கன்சல்டிங (Deloitte Consulting) நிறுவனத்தினால் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

முதல் இணைய செயலமர்வானது அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் (Food and Drug Administration - FDA) விதிமுறைகளுக்கு எவ்வாறு இணங்கிச் செயற்படுவது என்பதை விளக்கப்படுத்தியிருந்தது. தனிப்பட்ட பாதுகாப்பு உகரண ஏற்றுமதிக்கு பொருத்தமான வகைப்படுத்தல்கள் பற்றிய நிபுணர்கள் மற்றும் FDAஇன் அவசரகால பயன்பாட்டு அங்கீகாரம் (Emergency Use Authorization) (COVID-19 நெருக்கடியின் போது தற்காலிகமாக செயல்படுத்தப்பட்டது) என்பன பங்கேற்பாளர்களுடன் இணைந்து செயற்பட்டதுடன், செயல்முறை முழுவதும் அவர்களை வழிநடத்தியும் சென்றனர். இரண்டாவது இணைய செயலமர்வானது அமெரிக்க சந்தையை அணுகுவது சம்பந்தமானதாக இருந்தது. இதில் அமெரிக்க அரசின் தேவைப்பாடுகளை உள்ளடக்கியதாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத்துக்கான சந்தை கேள்வி, விநியோகச் சங்கிலி மற்றும் அமெரிக்க மத்திய அரசுக்கு எவ்வாறு விற்பனை செய்வது என்பவை குறித்து அமெரிக்க நிபுணர்களுடன் ஆழ்ந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பங்கேற்பாளர்கள் இதில் அமெரிக்க அரசாங்கத்தின் கையகப்படுத்தல் ஒழுங்குவிதிகள் பற்றி கற்றுக்கொண்டதுடன், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண உற்பத்தியானது சாத்தியமானதொன்றாகவும் மூலோபாய, நீண்டகால தீர்மானமாகவும் இருக்குமா என்பதை தீர்மானிப்பதில் கருத்தப்பட வேண்டிய அடிப்படைகளையும் ஆராய்ந்தனர்.

உலகளாவிய நவீன ஆடை வடிவமைப்பு வர்த்தக சின்னங்கள் மற்றும் சந்தைகளுக்கான நெறிமுறையாக தயாரிக்கப்பட்ட உயர்தர ஆடைகளின் முன்னணி விநியோகஸ்தராக இலங்கையின் ஆடைத் துறை பல ஆண்டுகளாக உருவெடுத்துள்ள நிலையில், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதற்கான சிறந்த நிலையில் அது

இருக்கிறது. தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களானது COVID-19 தொற்றுப்பரவல் காரணமாக உருவெடுத்துள்ள வேகமாக விரிவடைந்துவரும் மிகவும் போட்டிமிக்க புதிய சந்தையொன்றாகும். குறிப்பாக அமெரிக்க தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண சந்தையை பொறுத்த வரையில், விசேடமாக உயர் ஆபத்துள்ள உற்பத்திகளுக்கு தரங்களை பேணும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரண விநியோகஸ்தர்கள் தேவையாக இருக்கின்றனர். இலங்கையின் ஆடைத் தொழிற்துறையானது நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய துறையொன்றாக காணப்படுவதுடன், கணிசமான அந்நிய செலாவணியையும் சுமார் ஒரு மில்லியன் பணியாளர்களுக்கான வாழ்வாதாரத்தையும் உருவாக்குகிறது. COVID-19 இனால் அது மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்ற வகையில், தங்களது செயற்பாடுகளை தக்கவைத்துக் கொள்ள தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களின் உற்பத்தி உள்ளிட்ட தமது ஏற்றுமதிகளை மீள நிலைநிறுத்த ஆடைத் தொழிற்துறை ஏற்றுமதியாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.